
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1225

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

# ‘மைனாரிட்டி’ தி.மு.க.

மரு.எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

67

தி.மு.க.வுக்கும் சிறுபான்மையினருக்குமான உணர்வுபூர்வமான உறவையும் உரிமைச் செயல்பாடுகளையும் விவரிக்கும் தொடர்




## உமறுப்புலவரைப் போற்றிய முத்தமிழறிஞர்!

தமிழின் தலைசிறந்த இஸ்லாமியக் கவிஞர்களில் ஒருவர் உமறுப்புலவர். தமிழ் இலக்கிய வரலாற்றில், கம்பன், சேக்கிழார், வில்லிபுத்தூரார் போன்ற காவியப் புலவர்களின் வரிசையில் குறிப்பிடப்படும் முக்கியமான கவிஞர் ஆவார். தமிழில் இஸ்லாமிய சமய இலக்கியத்தை உயர்ந்த கவிதை வடிவில் படைத்தவர் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர். கி.பி. 1642-ஆம் ஆண்டு எட்டயபுரத்தில் பிறந்த இவர், எட்டயபுரம் மன்னர் வெங்கடேஸ்வர எட்டப்ப பூபதியின் அவைப் புலவரான கடிகைமுத்துப் புலவரிடம் தமிழ் இலக்கியம் கற்றார். அதன் பின்னர், அவர் எட்டயபுரம் ஜமீனின் அரண்மனைப் புலவராக நியமிக்கப்பட்டார். இளமையிலேயே புலமை பெற்று, எட்டயபுரம் அரசவைப் புலவராக உயர்ந்தார்.

அவரது முன்னோர்கள் வாசனைத் திரவிய வியாபாரத்திற்காக இந்தப் பகுதிக்கு வந்து முதலில் நாகலாபுரத்தில் குடியேறினர். பின்னர் எட்டயபுரத்திற்கு இடம்பெயர்ந்தனர். அங்கேயே 1642-ஆம் ஆண்டு, உமறுப்புலவர் பிறந்தார். தமிழ் இலக்கிய மரபில் இருந்த யாப்பு, அணி, உவமை, உருவகம் போன்ற கவிதை நயங்களைப் பயன்படுத்தி, இஸ்லாமியக் கருத்துகளைத் தமிழில் அழகாக வெளிப்படுத்தினார். செம்மையான தமிழ் நடை, சங்க இலக்கியச் சொற்கள், காவிய அமைப்பு, பக்தி மற்றும் அறநெறிக் கருத்துகள் இவருடைய இலக்கியத்தில் நிறைந்திருந்தன. குறிப்பாக, நபிகள் நாயகம் வரலாற்றை எடுத்துரைக்கும் மகா காவியமாக உமறுப்புலவர் படைத்த சீறாப்புராணம் குறிப்பிடத்தக்கது. விலாதத்துக் காண்டம் (பிறப்பு), நுபுவத்துக் காண்டம் (இறைத்தூதுத்துவம்), ஹிஜ்ரத்துக் காண்டம் (இடம்பெயர்தல்) என மூன்று காண்டங்களைக் கொண்டது இந்தக் காவியம். இதில் மொத்தம் 5,027 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இந்தக் காவியத்தை முழுமையாகப் படைக்கும் முன்பே அவர் காலமாகிவிட்டார்.

முதுமொழி மாலை, சீதக்காதி திருமண வாழ்த்துப் பாடல்கள், தனிப்பாடல்கள், வாழ்த்துப் பாடல்கள், சமயப் பாடல்கள் எனத் தமிழ் இலக்கியத்திற்கு இவர் ஆற்றிய பங்களிப்பு இன்றியமையாதது. அதனாலேயே ‘தமிழ் இஸ்லாமிய இலக்கியத்தின் தந்தை’ எனப் போற்றப்படுகிறார் உமறுப்புலவர். அவரது படைப்புகள் தமிழ், இஸ்லாமிய வரலாறு மற்றும் சமய இலக்கிய ஆய்வுகளில் இன்றளவிலும் முக்கிய ஆதாரங்களாக உள்ளன. எனினும், சமய எல்லைகளைத் தாண்டி தமிழ் மொழிக்குச் சேவை செய்த புலவராக மதிக்கப்படுகிறார் என்பதும் தனிச்சிறப்பு.

### கலைஞர் அமைத்த மணிமண்டபம்

அத்தகைய தனிச்சிறப்புக்கு உரிய உமறுப்புலவருக்கு எட்டயபுரத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்ட இடத்திலேயே மண்டபம் எழுப்பி, ஆண்டுதோறும் கந்தூரி விழாவுக்கு ஏற்பாடு செய்தார், அன்றைய எட்டயபுரம் சிற்றரசர். ஆனால், காலப் போக்கில் தொய்வைச் சந்தித்த நிலையில், 1912-இல் பிச்சையாக் கோனார் என்ற தமிழ் ஆர்வலர், எட்டயபுரம் இஸ்லாமிய இடுகாட்டில் ஒரு சமாதியை எழுப்பி, கந்தூரி விழாவை மீண்டும் தொடங்கினார். காலப்போக்கில் அது தர்கா ஆனது. அதன்பிறகு, உமறுப் புலவருக்கு என்று வரலாற்றில் எந்த நினைவுச் சின்னமும் ஏற்படுத்தப்படாத சூழலில், 2006-இல் முத்தமிழறிஞர் கலைஞர், உமறுப்புலவருக்கு மணிமண்டபம் எழுப்பத் தீர்மானித்தார்.

இரண்டு தளங்களைக் கொண்ட ‘அமுதகவி உமறுப்புலவர் நினைவு மணிமண்டபமாக’ அது கட்டியெழுப்பப்பட்டது. அந்த நினைவு மண்டபத்தை 2007-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், அன்றைய சபாநாயகர் ஆவுடையப்பன் திறந்துவைத்தார். இந்நிகழ்ச்சியில், அன்றைய அமைச்சர்கள் கீதா ஜீவன், பரிதி இளம்வழுதி, டி.பி.எம்.மொய்தீன் கான், மாவட்ட ஆட்சியராக இருந்த ஆர்.பழனியாண்டி, மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலர் எஸ்.ஆர்.சாரதி மற்றும் வருவாய்த் துறையின் மூத்த அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர். இதன் தரைத்தளத்தில் கல்லறை மற்றும் தொழுகைக் கூடம் அமைக்கப் பட்டுள்ளன. மேல்தளத்தில் நூலகம் அமைக்கப் பட்டுள்ளது. உமறுப் புலவரின் 1,000 இலக்கியப் படைப்புகள் கட்டம் கட்டமாக அந்நூலகத்தில் சேர்க்கப் பட்டன. பொதுமக்கள் நூலகத்தை இலவசமாகப் பார்வையிடும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தது, கலைஞர் அரசு.

இந்த நூலகத்தில் உமறுப்புலவரின் கையெழுத்துப் பிரதிகள், புத்தகங்கள் மற்றும் தனிப்பட்ட பொருள்கள் உட்பட, அவருடன் தொடர்புடைய பல்வேறு கலைப்பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் அவரது வாழ்க்கை, இலக்கியப் படைப்புகள் மற்றும் தமிழ் இலக்கியத்திற்கான பங்களிப்புகள் குறித்த பார்வையை வழங்கும் கண்காட்சிகளைக் காணலாம். தமிழ் இலக்கியம் மற்றும் மொழி தொடர்பான கலாச்சார நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகளுக்கான இடமாகவும் இந்த நினைவு மண்டபம் செயல்படுகிறது. அதனால், இது தமிழ் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை மேம் படுத்துவதிலும் பாதுகாப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கும் இடமாகவும் உருவெடுத்துள்ளது.

வெறும் நினைவிடமாக மட்டும் அல்லாமல், உமறுப்புலவரின் இலக்கியங்களை வாசித்து அறியும் வரலாற்றுக் கருவூலமாகவும் அதனை அமைத்ததுதான் கலைஞரின் தனிச்சிறப்பு. தமிழ் இலக்கியத்திற்கு இஸ்லாமியர்கள் ஆற்றிய வரலாற்றுப் பங்களிப்பைப் பெருமையோடு எடுத்துச் சொல்லும் இடமாக உமறுப்புலவர் நினைவு மண்டபம் திகழ்கிறது. இந்த மணிமண்டபம் திறக்கப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்பே, முத்தமிழறிஞர் கலைஞருக்கு, இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் சார்பில் 7-வது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டில் உமறுப்புலவர் விருது வழங்கப்பட்டது என்பதும் பொருத்தமானது. கலைஞரின் வாழ்நாள் இலக்கிய சாதனைக்காகவும், இஸ்லாமிய சமுதாயத்திற்குக் காட்டும் ஆதரவுக்காகவும் ரூ.1 இலட்சம் பொற்கிழியுடன் கூடிய உமறுப்புலவர் விருதை, மாநிலங்களவை துணைத் தலைவர் ரகுமான்கான் வழங்கினார்.

இஸ்லாமிய இலக்கியத்தின் மணிமகுடமான ‘சீறாப்புராணத்தை’ இயற்றிய உமறுப்புலவர் மீது மிகுந்த பற்றும் மதிப்பும் கொண்டிருந்த கலைஞருக்கு, இந்த விருது மிகப் பொருத்த மானது. மணிமண்டபம் மட்டுமல்ல, உமறுப் புலவரின் காவியத் திறனைப் போற்றியதுடன், அவரது நற்பெயரைப் பறைசாற்றும் வகையில் பல வரலாற்றுச் சிறப்புகளையும் கலைஞர் செய்துள்ளார். அந்த வகையில் உமறுப்புலவரை உலகம் அறியச்செய்யும் முயற்சியாகக் கட்டியெழுப்பப்பட்ட மணிமண்டபம், காலத்திற்கும் கலைஞரின் புகழையும் சேர்த்தே சொல்லும்.

“உமறுப்புலவரை உலகம் அறியச்செய்யும் முயற்சியாகக் கட்டியெழுப்பப்பட்ட மணிமண்டபம், காலத்திற்கும் கலைஞரின் புகழையும் சேர்த்தே சொல்லும்.”

...நீளும்

## ‘தி.மு.க. எங்கே’ என்ற கேள்விகளால் திணறிய காங்கிரஸ்!

இந்தியா கூட்டணிக் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் 08.06.2026 அன்று டெல்லியில் நடைபெற்றுள்ளது. ‘தமிழ்நாட்டில், தி.மு.க.வுக்கு காங்கிரஸ் செய்த துரோகத்திற்காக, இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை’ என்று திராவிட முன்னேற்றக் கழகம் அறிவித்தது. தி.மு.க.வைப் போலவே ‘ஆம் ஆத்மி’ கட்சியும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்கவில்லை.

தமிழ்நாட்டில் தி.மு.க.வுக்கு துரோகம் இழைத்ததைப் போலவே, கேரளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியையும், மேற்கு வங்கத்தில் திரிணாமுல் காங்கிரஸையும், பீகாரில் ராஷ்ட்ரிய ஜனதா தளத்தையும், உத்தரப் பிரதேசத்தில் சமாஜ் வாடியையும், டெல்லியில் ஆம் ஆத்மியையும் தன்னால் இயன்ற அளவுக்கு அவமதித்து, மனக்கசப்பைச் சம்பாதித்து வைத்திருக்கிறது, காங்கிரஸ் கட்சி. அந்த மனக்கசப்புகள் எல்லாம் திரண்டு, காங்கிரஸுக்கு எதிரான மாநிலக் கட்சிகளின் மனநிலையைத் துல்லியமாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறது, இந்தியா கூட்டணியின் ஆலோசனைக் கூட்டம்.

கேரளத்திலே எந்த அடிப்படையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும் பா.ஜ.க.வும் ஒன்று என்று பிரச்சாரம் செய்தீர்கள் எனக் கேட்ட அக்கட்சியின் மூத்த தலைவர் ஜான் பிரிட்டாஸ், “இரண்டு அமைச்சர் பதவிகளுக்காக உங்கள் முக்கியக் கூட்டணிக் கட்சியான தி.மு.க.வைக் கைவிட்டுவிட்டீர்களே” என்று நாக்கைப் பிடுங்காத குறையாகக் கேட்டுவிட்டார். பீகாரில், காங்கிரஸ் எம்.எல்.ஏ.க்கள் பா.ஜ.க.வுக்குத் தாவியதால், இந்தியா கூட்டணி ஒரு மாநிலங்களவை எம்.பி. இடத்தை இழந்துவிட்டது என காங்கிரஸின் கையாலாகாதத்தனத்தைச் சுட்டிக்காட்டிய தேஜஸ்வி யாதவ், ‘தி.மு.க.வை மீண்டும் கூட்டணிக்குள் கொண்டுவர முயல வேண்டும்’ என்று காங்கிரஸுக்கு அழுத்தம் கொடுத்தார்.

‘காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை காங்கிரஸ் ஒரே நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமே தவிர, ஒவ்வொரு மாநிலத்திலும் கூட்டணியில் இருக்கிற மாநிலக் கட்சிகளை, நோண்டிக்கொண்டிருக்கக் கூடாது’ என்று சீறிய அகிலேஷ் யாதவும், ‘தி.மு.க.வைக் கூட்டணிக்குள் கொண்டு வருவதற்கான வழியைப் பாருங்கள்’ என்று காங்கிரஸை எச்சரித்திருக்கிறார். தேசியவாத காங்கிரஸ் கட்சியின் சுப்ரியா சுலேவும் இதே கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். நேர்மையாகப் பதில் சொல்ல முடியாமல் அம்பலப்பட்டு இருக்கிறது, காங்கிரஸ் கட்சி.

## குடும்ப அரசியல் உணர்வு!

ஃப்ளாஷ்பேக்



2011-ஆம் ஆண்டு, தேர்தல் முடிவுகளுக்குப் பின்னர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களைச் சந்திக்க, அண்ணா அறிவாலயம் சென்ற என் பெற்றோர், சிறுவனான என்னையும் அழைத்துச்சென்றனர். அப்பா சுல்தான், கிளைக் கழகத்தில் உள்ளார். தாயார் ஜென்னத்து நிஷா, ஈரோடு தெற்கு மாவட்டத்தின் மகளிர் தொண்டர் அணித் துணை அமைப்பாளராக இருந்தார். அன்று, தலைவர் அவர்களைக் கண்டதும், அவரிடம் வாழ்த்துப் பெறுவதற்காகக் காலில் விழுந்து வணங்கினேன். அந்த மாபெரும் தலைவர் என்னை எழுப்பிவிட்டு, “இந்தப் பழக்கத்தை மாற்றிக்கொள்ள வேண்டும். இதற்குப் பிறகு யார் காலிலும் விழக்கூடாது” என்று எனக்கு அறிவுறுத்தினார். சுயமரியாதை உணர்வைத் தன் உணர்வாகக் கருதிய அந்தத் தலைவரை நினைக்கும்போதெல்லாம், அவர் ஊட்டிய உணர்வும் முன்நிற்கும்.



சு.முஹம்மது மீரான்

– சு.முஹம்மது மீரான், மாணவர் அணித் துணை அமைப்பாளர், கோட்டைப் பகுதி, ஈரோடு தெற்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## நம் வரலாறு

### தவிர்க்க முடியாத கழகம்!

1954-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், காரைக்குடியில் பாண்டியன் படிப்பக விழாவில் உரையாற்றினார், பேரறிஞர் அண்ணா. “இன்று நம் நாட்டில் பல அரசியல் கட்சிகள் மக்களைத் தட்டிக்கொடுத்துப் புகழ்ந்து பேசி, அவர்கள் ஆதரவைத் தேடுகின்றன. அதன்மூலம் ஓட்டு பெறுகின்றன. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமோ, நாட்டில் மக்களிடம் அவர்கள் மூடநம்பிக்கையைப் போக்கப் பாடுபடுகிறது. அதனால், எங்களுக்கு ஆதரவு அதிகமில்லாதிருந்தது. இன்று, மக்கள் சமுதாயச் சீர்திருத்தம் பற்றிய அவசியத்தை உணர்ந்துவிட்டார்கள். எங்கள் கொள்கைகள் இன்று மக்களிடையே தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது” என்று உரையாற்றினார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900